அதுபோலவே கலைஞர் கருணாநிதி நகரில் அந்த வட்டார மக்களுக்கு உதவும் வகையில் கடைகள் கட்டுவதற்காக ஒதுக்க பட்டிருந்த இடம் அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு. கருப்பசாமி பாண்டியனுக்கும், திரு. கோவைத்தம்பிக்கும் வீடு கட்டுவதற்கு என்று வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

இவ்வாறு முறைகேடாக தரப்பட்டுள்ள 302 கிரவுண்டில் உள்ள 240 பிளாட்களின் மார்க்கெட் விலை சுமார் 13 கோடி ரூபாய்.

இதன் பின்னணியில் இந்த 240 பிளாட்டுகள் ஒதுக்கீடு தொடர்பாக விரிவாக விசாரணை செய்து நடைபெற்ற வீட்டு மனை ஒதுக்கீடு ஊழல் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு இவ்வரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) ஒதுக்கீடு பெற்றோர்கள் அனைவரும் வீட்டுமனை பெறத் தகுதி உள்ளவர்களா என்பதை விசாரித்து, தகுதியற்ற வர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பின், அவ்வொதுக்கீடுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

(2) இந்த மனைகளில் முறையான விசாரணையின்றி வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

(3) ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட, பூங்கா, சமூக கூடம் போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டுவசதி வாரியம் திரும்பப் பெறவேண்டும்.

இந்த ஆணையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் உடனடியாக உரிய விசாரணை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். அதனையொட்டி இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டு ஊழல்கள் புரிந்தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைச் சொல்லி இந்த அறிக்கையை அவையில் வைக் கிறேன்.

6. அவையில் பயன்படுத்தப் பெற்ற சில சொற்கள் குறித்துத் தலைவரின் குறிப்புரை

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மக்களுடைய ஆதரவாலும், இறைவனுடைய திருவருளாலும் ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும், மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகவும் வந்திருக்கிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன், எதைச் சொல்ல விரும்பு கிறேன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 4

தலைவராக, திரு. மூப்பனார் அவர்களுடைய தளபதியாக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஏன் என்று கூட சொல்லாமல், 'வாடா, போடா' என்று சொல்வது பொருத்தம்தானா? ஏற்கெனவே ஒரு தடவை நான் இந்தப் பொருளைத் தான் பற்றி சொன்னேன். இதைப் போல ஒரு தடவை எழுந்த போது 'அடுத்த கையை ஒடிப்பேனடா' என்று எந்த திசையிலிருந்து அந்த சொற்கள் வந்தனவோ, அதே போல இங்கே வருவதனை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்களே, இந்த கை சங்கத் தமிழ் எழுதுகின்ற ஆற்றல் பெற்ற கையல்ல, பாலைவன ரோஜாக்களை எழுதுகின்ற ஆற்றல் பெற்ற கையல்ல. அரசாங்கக் கோப்புகளிலே கையெழுத்துப் போடுகின்ற ஆற்றல் பெற்ற கையும் அல்ல. ஆனாலுங்கூட சொல்கிறேன். நமது அவையிலே எடுத்தவுடனேயே, யாரை யார் சொல்வது என்பது கூட இல்லாமல் 'வாடா, போடா' என்று சொல்வதும், நம்மிலே சில உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாக வெகு நேரம் பேசுவதும், ஒருவர் ** என்று சொன்னால், மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அதை மிக இலக்கியச் சுவையோடு சொல்கிறார்கள், அதையும் நான் பார்க்கிறேன். இந்த இலக்கியச் சுவையை உணர்கின்ற இதயத்தை நாம் எல்லாம் நம் தமிழ் அன்னையிடத்திலே பெற்றிருக்கிறோம். பிறகு அது குப்பையா, கோமேதகமா என்று சொல்கிறேன். அதன் பிறகு தொடர்ந்து வாதம் செய்வதை அனுமதிக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், பாரதிதாசன் விழா எடுக்க இருக்கிறோம். நமக்குத் தெரியும். வானத்திலே இருக்கின்ற நட்சத்திரக் கூட்டங்களை ''வானம் எங்கும் வைரக் குப்பை'' என்றே சொல்வான். மக்கள் குடியிருக்கின்ற இடம் குப்பம் என்று பெயர். இத்தனையையும் நான் இங்கே விளக்கிச் சொல்வதற்கு நேரம் தருவார்களா? இல்லை. ஆனால் மற்றவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது. எனவே, உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 'வாடா, போடா' என்ற சொற்களையெல்லாம் தவிர்ப்பது நல்லது. இப்படிப்பட்ட சொற்றொடர்களை நாம் பயன்படுத்துவதன் மூலம் ஒருவருக்கொருவர் வேதனைப்படுவதைத் தவிர வேறு இருக்காது. நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி, யார் தவறு செய்தாலும் சொல்கிறேன், அந்த வகையிலே பார்க்கின்றபோது, இந்த பகுதியிலே சத்தம் போடுகிறவர்கள் யாருக்கும் உயர்ந்தவர்களாக அவர்கள் இல்லை என்பதை மனவேதனையோடு சுட்டிக்கொண்டு, இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பதை கண்டித்து எங்களுடைய கட்சியினுடைய சார்பிலே அனைவருமாக வெளிநடப்பு செய்கிறோம்.................

திருமதி பாப்பா உமாநாத்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். முதல்வர் அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த வார்த்தைகளை திருப்பிச் சொல்லக்கூட விரும்பவில்லை. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அ.தி.மு.க.-வினர் ஒரு காரணத்திற்காக வெளியேறினால், அவர்களும் ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு வெளியேற விரும்புவது இந்த பாராளுமன்ற முறையிலே எங்களோடு சேர்ந்து ஒத்துழைத்து நடத்திக் கொடுப்பதற்கு ஒருவேளை முன்வரவில்லையோ என்று பெரிதும் வேதனைப்படுகிறேன். தங்களைப்போன்ற தமிழ் உள்ளம் படைத்தவரிடத்திலே நான் அப்படிப்பட்ட ஒரு நிலையை எதிர் பார்க்கவில்லை. யார் அப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லி யிருந்தாலும், 'வாடா, போடா' என்ற வார்த்தையை சொல்லியிருந்தாலும், அதற்காக நான் அவர்கள் சார்பிலே மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அல்லது இன்னார் என்று சொன்னால், திரு. குமரி அனந்தன் அவர்கள் சுட்டிக் காட்டு வார்களேயானால், அவரை இங்கே எழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். அவர்களும் இலக்கியத்தைப் பற்றிச் சொன்னார்கள். இலக்கியம் அவருக்கும் பிடிக்கும் என்பதால் சொல்கிறேன். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று அங்கே 'டா' போடுகிறோம். அது இலக்கியம். அதுபோல' 'கொலை வாளினை எடடா, மிகக் கொடியோர் செயல் அறவே என்று அங்கே 'டா' போடுகிறோம். அது இலக்கியம். ஆனால் உரையாற்றும்போது, கோபத்தில், ஆத்திரத்தில், ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகிற நேரத்தில் 'வாடா, போடா' என்று சொல்வதெல்லாம் பாராளுமன்ற முறை அல்ல, அரசியல் பண்பாடு அல்ல, இன்னும் சொல்லப் போனால், அரசியலை எல்லாம் விட்டுவிட்டுப் பார்த்தால்கூட, தமிழ்ப் பண்பாடல்ல என்பதை நானும் உணர்த்துகிறேன். அதற்காக நான் மெத்தவும் வருந்துகிறேன். யாரோ அப்படிச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். யார் என்று குறிப்பிட்டு நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்வார்களேயானால் அவரை இந்த அவையில் எழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பாராளுமன்ற நடவடிக்கைகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதில் இந்திய தேசிய காங்கிரஸ் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. "கொலை வாளினை எடடா, மிகக் கொடியோர் செயல் அறவே" என்று சொல்லுகின்ற அருமையான சொற்றொடரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆண்டவனைப் பற்றிக்கூடச் சொல்லும்போது, கோபத்தில் 'என்னடா ஆண்டவா, ஏன் என்னை இத்தனை துயரத்திற்கு ஆளாக்கி விட்டாய்' என்று ஒருமையில் பேசுவதும் உண்டு. ஆனால் இந்தப் பொருள்களில் இங்கே பேச்சு நடைபெறவில்லை.

அதனாலேதான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டுப் பெயரை சொல்லச் சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்டு நான் பலரைச் சொல்ல வேண்டி வரும். ஆனாலும் ஒன்றே ஒன்றை மனதிலே குறித்து வைத்துக்கொண்டால் போதும். வளர்கிற பிள்ளைகள் இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை மனதில் வைத்துக் கொண்டும், என்னைப் போன்றவர்கள் வேதனையோடு சொல்வதை மனதிலே வைத்துக்கொண்டும் இனிமேல் இப்படிப்பட்ட சொற்றொடர்களை பயன்படுத்தாமல் இருந்தால் அதுவே போதும் என்பது இந்திய தேசிய காங்கிரஸ் அவர்களுக்கு சொல்லுகின்ற நல்ல நன்றியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிக்க உறுப்பினர் பெருமக்களே, உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய இந்த வேதனையான வினாவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த ஆறுதலான விடையும் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. எந்தக் காரணம் கொண்டும் இந்த அவையில் ஒரு கருத்துக்கு இன்னொரு கருத்து என்று வளருமானால்கூட தவறான சொற்களை, அவதூறான சொற்களை, பண்பாட்டுக்கும் நாகரீகத்திற்கும் குறைவான சொற்களைப் பயன்படுத்துவதை ஒவ்வோர் உறுப்பினரும் கட்டாயம் கைவிட்டே ஆக வேண்டும். மீண்டும் அதுபோன்ற தொடர்களை அவர்கள் பயன்படுத்துவார்களானால், சுட்டப்படுவார்களானால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, இந்த அவையிலேயே அவர்கள் மன்னிப்பும் வருத்தமும் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதையும் மனதில் கொண்டு அனைவரும் மிகுந்த பண்பாட்டுடன் நடந்து கொண்டு, நம்முடைய எதிர்கால சந்ததியினர்களுக்கு விட்டுச் செல்வது நல்ல மரபே தவிர இதுபோன்ற தவறான உதாரணங்களாக இருக்கக்கூடாது என்பதை மனதில்கொண்டு இந்தப் பிரச்சினையை இத்தோடு முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று தெரிவித்து அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடி என்னுடைய அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

7. அறிவிப்பு.

1989–90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989–90 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 203, Clause (3), of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1989-90."